தத்தகுருபதம். பற்றிப்பிடிநிதம்

உ

ஓம் தத் ஸத்.

குருபரப்பிரம்மணே நம.

மார்க்கண்டேய வர்க்கம்.

ஸ்ரீ, சற்குரு சிவானந்த சுவாமிகள் குருபாத ஸ்துதி மாலை.

ஓம் நிர்மலம் ஆனந்தம்.

ஓம் சாந்தி.

1927.

ஓம் தத் ஸத்

குருபரம் ப்ரஹ்மணே நம:

மார்க்கண்டேய வாக்கியம்

ஸ்ரீமத் சிவாநந்த சுவாமிகள்.

குருபாத ஸ்துதி மாலை.

இது,

அயன்புரம் வாசி

ஆரூதார விலாச முதலிய நூலாசிரியர் வித்வான் கன்னி புத்தூர். வேலாயுத முதலியார் குமாரரும் ஷை சுவாமிகள் மாணவருமாகிய சென்னை - திருவெட்டீஸ்வரன் பேட்டை.-சமரச நிலைய சன்மார்க்க சபைத் தலைமை-

த ணி கை.

சுவாமி நிர்மலானந்தம் வேதாசலம் அவர்களால்

இயற்றபட்டு

ஷை சபையின் அங்கத்தினராகிய

தக்ஷிண மூர்த்திகம்பெனி,

சி. தங்கவேலுமுதலியாரவர்களாலும்

ஆனந்த கோபால் என்பவராலும்

அச்சிற் பதிப்பித்து,

பெரவள்ளூர் ஏரி ஷை சுவாமிகள்.

சமாதியின்கண் நடத்திய

மண்டலாபிஷேக

பூஜா வைபவத்

தன்று.

விநியோகிக்கப் பட்டது.

பிரபவ ஞு] ஓம் சாந்தி [கார்த்திகை மதி.

(20-11-27)

உ

ஓம் தத்ஸத்

ம-ள-ள-ஸ்ரீ வேதாந்த தர்க்கபோதக

ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியார்

அவர்கள் இயற்றியது

நேரிசை வெண்பா.

சித்தர் தெளிந்த சிவாநந்த தேசிகன்மேல்
வித்தகமா மாலை விளம்பினான்—சித்திருவ
மானவே தாசல னன்புருவ நிர்மலன்
வானம் புகழ மகிழ்ந்து.

திருச்சிற்றம்பலம்

ஓம் சாந்தி.

உ

ஓம் தத்ஸத்

முகவுரை.

சித்தசாந்திச் செல்வர்காள்!

பூதமுதல் நாதபரியந்தமும் உள்ள புவனாதிபோகாதி பத்திய அனந்த பதங்களெல்லாம் சர்வேஸ்வர அகிலமாயையின் (இப்பியில் வெள்ளிபோலும்) தோற்றமென்றியற்கை யுணர்வில் உலகெது உயிரெது பரமெது என்பதுணர்ந்து இப்பிரபஞ்சத்தின்மீது வைத்த சத்திய புத்தியை விட்டொழிந்து அறிவை அறிவது பொருளென அவ்வறிவைப் பெற்றுய்யக் காட்டும் காரணதேசிக மூர்த்தியைத் தேனாளிபோல் தேசமெல்லாந்தேடி அச்சுத்த சிவமே இவரென சத்பாவம் வைத்து சிரவண மனன நிதித்தியாசனங்கள் பழகி நித்தியாநித்திய வஸ்துவிவேகம். இக முத்திரார்த்த பல போகவிராகம் சமாதிசட்க சம்பத்தி. மு முக்ஷத்துவம் எனும் ஞானசாதனம்; நான்கும் கைவந்து ஆப்தம் அங்கம் தானம் சற்பாவம் எனும் நான்கு சிசுருக்ஷையுமுடித்து மைத்திரி கருணை முதிதை உபேக்ஷை முதலிய சற்குணங்கள் நான்கும் வாய்க்கப்பெற்று உடல்பொருள் ஆவி. மூன்றையும் உள்ளபடியே சற்குருபானுக்கு தத்தஞ் சமர்ப்பித் தவரால் ஓர் மொழியுண்மையைக் கற்று தத்சொரூப. (அறிவிற்) சமாதியில் பிறப் பிறப்பற்றிருத்தலே எடுத்த இம்மானுட தேகத்தின் எழிலரும் பயனுமென்பது. ஆன்றோர் வாக்கியத்துணிபு. என்பது உணர்வாகும். அத்தகைப் பேருணர்வால், தமக்குற்ற திருக்கோலத்தை மறைத்து எமக்குற்ற கோல மென்போற் காட்டியடியேனை யாளவெழுந்த மார்க்கண்டேயவர்க்கம். ஸ்ரீமத் சிவாநந்த சுவாமிகள்மீது குருபாத ஸ்துதி மாலை யென்றொன்று வகையுடன்பாட வழியிலேனெனினும் எமது சிற்றறிவிற்கெட்டியவாறு பாடியதாம். உலகம் அம்சபக்ஷியைப்போல நீரைப்போலும் சோற்குற்றம் பொருட்குற்றங்களைந்து. சற்குருநாம உச்சரிப்பிருக்கும் காரணத் தாற் பாலைப்போலும். இதை அங்கீகரித்துக்கொள்வரென்

பது அறிந்து எமதறியாமையை யொழிக்க வெளியிட்ட தென்பதுணர்ந்துலகம் குற்றங்குணமாக் கொள்க, அன்றியும்.

தமக்குற்ற காரிய மனேகமிருப்பினும் இச்சிறுவன் காரியமும் சிரமம் பாராது பொருட்படுத்தி ஸ்ரீ சற்குருநாதன் காரியமாமெனச்சேர்திருத்தித்தந்த ம-ள-ள-ஸ்ரீ வேதாந்த தர்க்க போதகாசிரியர் கோ. வடிவேலு செட்டியார் அவர்கள் நன்றியை யொருபோது மறக்கற்பாலதன்றும். ஞானபண்டித சாமி நற்றுணே.

அடிமை.

தணிகை நிர்மலானந்தம் க. வேதாசலம்.

சிவம் சம்பூர்ணம்

ஓம்சாந்தி.

ஓம் தத்ஸத்

ஓம் சிவாய குருவே நமஃ.

சிறப்புப்பாயிரம்.

ஸ்ரீ பிரணவ மூர்த்தி துதி.

பிரணவமூலப் பெருந்தகை யைங்கரன்
சரணடிநாளுந் தலைக்கணி யாமே.

ஸ்ரீ தக்ஷிண மூர்த்தி துதி.

தாரா வருளைத் தனிநால் வருக்கு
நேரா யுரைத்த நீண்முத் திரைக்கை
யேரார் மூர்த்தி யெழிற்சரண் சரணே.

ஸ்ரீசங்கரர் துதி.

பொங்கர வணிந்து பொன்னம் பலத்தில்
மங்களநடமிடு மணியைக் கயிலை
சங்கர சிவகுரு சரணடைக் கலமே.

ஸ்ரீ உபாசன மூர்த்தி துதி.

கற்குமுறைமை கற்றறிந்ததன்வழி
நிற்குமதறியா நிசமிலுணர்விலி
யெற்குத்துணையா மெழிற்றணி மலைவளர்
சிற்குகனுளனென் சிந்தையி னுளனே.

ஸ்ரீசத்குரு துதி.

தவானந்த னற்கண்டன் றுட்கருணை
யதுகாட்டுந் தகைபோன் ஞானத்
திவானந்த னெனவந்திங் கறிவிற்ச
மாதிநிலை தெரியக் காட்டி
யிவானந்த மன்றிநமக் கினியேது
மில்லென்ன வெனையாட் கொண்ட
சிவானந்த வாரியனற் சரணமலர்
வாரிசமென் சிரமேற் கொள்வாம்

ஸ்ரீ ஜீவன்முத்தர்துதி.

உத்தம ஜீவன் முத்தர்கள் பூம்பா
தத்தெழு தூசுத் தான்றிரு நீறெண
சுத்த மனத்தாற் சொல்லித் தரிப்பனே.

பாயிரம் சம்பூர்ணம்

திருச்சிற்றம்பலம்.

ஓம் சாந்தி.

ஓம் தத்ஸத்.

ஸ்ரீமத் சிவாநந்த சுவாமிகள் குருபாத ஸ்துதிமாலை.

நெஞ்சகப் பத்து

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

1. சீர்பூத்த கல்லாலி னடிக்கீ ழன்று
சின்முத்தி ராங்குசனுய்த் திகழ நால்வர்க்
கோர்பூத்த வறமுரைத்த சிவந்தா னேமுன்
னியற்கருணை யுருக்காட்டி யறிவிற் கூட்டிக்
கார்பூத்த கடியமல விருளை யோட்டி
கதித்தெழுசங் கற்பவிகற் பங்கள் வீட்டி
நார்பூத்த வெனதகம்விட் டகலா நிற்கு
நாயகனைத் தாயகனை நவிற்ருய் நெஞ்சே.

2. ஆசையெனும் பெருங்காற்று டுழற்று ரும்பா
யனித்தியமாங் காசினிபொன் மனைவி மக்கட்
டேசுபெறு மிளமைவள ராயுண் மேன்மை
திகழாதி பேராசை வயத்திற் பட்டு
காசமுறும் பிறப்பிறப்பி னலியப் பெற்ருல்
நற்றவமுஞ் சேராது சிவங்கா ணுது
பூசையெனக் கண்மூடிப் புலம்பி டாது
பூரணனை யாரணனைப் போற்ருய் நெஞ்சே.

3. செப்புகவித் தன்னமுலை மடவார் தங்கட்
சிற்றின்ப சாகரத்திற் றினமு மாழ்ந்தற்
றிப்புவியி னுள்ளிறுமாந் தெனதியா னென்ன
விகற்படைத்தா லுறுதிபயப் பதுவு முண்டோ
ஒப்பறிவு நிறையோர்ப்புக் கடைபி டித்த
லொள்ளியநற் குணமொன்று நாளெந் நாளோ
சொப்பிரகா சப்பொருளாய்த் துலங்கு ஞான
தய்யவனை மெய்யவனைத் தொழுவாய் நெஞ்சே

4. சத்தியமா யானந்த மயமாய்த் தானே
சர்வமுமாய்ச் சர்வமுந்தா ளுகி நின்ற
சித்துவிலா சப்பரனீ யாமென் றென்னைத்
தெளிவாக்கி யறியாமை கெடுத்தாட்கொண்ட
நித்தியநிட் களவடிவ நிமலன் றன்னை
நிரவயனை வென்னிதய வெளியின் மேவித்
தித்தியென நடனமிடு சபேசன் றன்னை
சின்மயனைத் தன்மயனைச் சிந்தி நெஞ்சே.

5. மச்சையுடன் மேதைதோல் போர்த்த சுத்த
மலபாண்ட மேய்ந்தவுடற் கின மான
விச்சைவகித் திச்சனன சாக ரத்தி
லிருவினைக ளெனுமலைக ளலைப்ப நின்றூற்
பிச்சுபெறு மிப்பிறவி யொழிவ துண்டோ
பீடுபெறத் தேகோக வாதை விட்டு
நிச்சல மாஞ் சிவோகமயப் பொருளாய் நின்று
நித்தியனை யகத்தியனை நிதஞ்சேர் நெஞ்சே,

6. சித்தியமென் பதுவான்ம ரூப மெய்ய
னித்தியமா வதுவிடயா திகடா மென்றே
தத்துவநற் சாதனசம் பத்தி யீந்து
சச்சிதா னந்தபர மான வுண்மைக்
குத்தியப வாதவா ரோபங் காட்டி
வுயர்சீவ பிரம்மைக்ய நிலையிற் கூட்டி
வைத்திடுமெய்ஞ் ஞானநபோ மணியைப் போற்றி
வாழ்ந்திடுவாய் தாழ்ந்திடுவாய் வஞ்ச நெஞ்சே.

7. சாற்றியவைம் பூதத்தாற் சமைத்து வைத்த
சடமான வாக்கைக்குட் சீவனென்ன
யேற்றியித்தே கேந்திரியங் கரணம் பிராண
னென்னவுபா திகளேழி லுழல்வேன் றன்னை
மாற்றினைப் பொடுமறப்பு மற்ற மேலா
மணிமேடை தத்தொமசி வாக்கி யத்தாற்
றேற்றியெனைத் தானுக்கி யிருத்தி யாண்ட
சிற்பரனைத் தற்பரனைச் செப்பாய் நெஞ்சே.

8. போதமதெ னும்பொருடான் ருனே தானுய்
புத்தமதாய் சதோதயமாய்ப் பூன்றமாகித்
தீதிலறி வானந்தக் காட்சி யாகிச்
செறிந்திருந்த படியிருக்க வதுவா காமற்
காதலுற வாபாரப் பிதற்றிக் காலங்
கழித்துகருத் தறியாத தூர்த்த வஞ்சப்
பாதகரை யொருவியுளக் குறிப்பை நாடிப்
பார்த்திருப்பாய் கார்த்திருப்பாய் பாவி நெஞ்சே.

9. அல்லல்வடி வாம்பிறவி தீர்க வென்றே
யடவியினிற் குகைபுக்குக் கல்ல டைத்துந்
தொல்லைவினைப் பிறவியொழி யாது கண்டாய்
சொப்பனகற் பிதமாகு மிப்பிர பஞ்ச
வெல்லைவரு சங்கற்ப விடய போகத்
தெழுமாசைக் கடலதனை நிராசைத் தியா
லொல்லையினில் வற்றிடச்செய் துய்யக்கொண்ட
வுண்மையனைக் கண்மையனை யுகப்பாய்நெஞ்சே

10. தன்னினைவின் மாத்திரமாய் நிகழ்ந்து தோன்றித்
தானழியும் திருசியமாம் பொருள்க ளெல்லாம்
பன்னிடிற்சொன் மாத்திரமாய் விளங்கு மென்றும்
பங்கின்றி யமர்வியன்மெய் யறிவு தானே
மின்னிடத்தன் மாத்திரமாய் விளங்கு மென்று
மிகவாக தற்போத வொழிவின் மன்னு
நின்னிலையிற் றன்மயமெய் முத்தி கூட்டு
நிருமலனைப் பெருநலனை நினைவாய் நெஞ்சே.

நெஞ்சகப்பத்து சம்பூர்ணம்

ஓம் நிர்மலம் ஆனந்தம்.

ஓம் சாந்தி.

ஓம் தத் ஸத்.

வேண்டற் பஞ்சகம்.

பதினைந்து சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

1. சீர்சான்ற நினதுபய மலரடியை யன்பினிற்
 றெரிந்தருச் சிக்க வேண்டும்
திறமனது றும்பெரியர் திகழிதய மேவுநின்
 றிருவருளி னிற்க வேண்டும்
போர்சான்ற விராகத் துவேஷாதி துர்க்குணப்
 போக்கினை யறுக்க வேண்டும்
பொல்லாத பஞ்சேந்த்ரிய வஞ்சகக் கள்வரை
 பொறுக்கென் றடக்க வேண்டும்
பேர்சான்ற வேதமுப நிடதங்கள் பேசுநின்
 பெருமைநன் குணர வேண்டும்
பேச்சற்ற வின்பாநு பூதிநிலை யுற்று பொய்ப்
 பேதங்கள் கழல வேண்டும்
ஆர்சான்ற மெய்யறி வெனும்வீட்டி லைக்யமுற்
 றமைதியுற் றிருக்க வேண்டும்
அமலசுப் பிரதீப விமலவப் பிரமேய
 வருட்சிவா னந்த மணியே.

2. என்னோர நினதுதிரு நிலயமதி னுப்பனுற்
 றிலங்கிடற் கருள வேண்டும்
யானென தெனும்பெரு வகந்தைதரு மிப்பிறவி
 யறக்களைந் திடுதல் வேண்டும்
நன்னயம தாகுமெய்ச் சாதனமி லாதவர்க
 ணட்பொரீஇ நிற்றல் வேண்டும்
நாதாந்த மோனவழி யாகார மன்றியயல்
 நாடா திருக்க வேண்டும்
கன்னலமு தெனுமறி விருக்கவறி யாமையெனுங்
 கைப்பருந் தாமை வேண்டும்
கருதுஞா துருஞான ஞேயமற் றுத்ததா
 காரமா யாக வேண்டும்

அன்னியம தில்லையென வுன்மனியபாவமா
யார்ந்தே யிருக்க வேண்டும்
அமலசுப் பிரதீப விமலவப் பிரமேய
வருட்சிவா னந்த மணியே.

3. பந்தசுக மோட்சமுண்டென்னுமொரு நினைவொரீஇப்
பரமசுக மடைதல் வேண்டும்,
பாழான துர்ச்சங்க நிவர்த்தித்து நற்சங்கம்
பழகிடற் கருள வேண்டும்
தந்திரத் தாற்றன்னைத் தானுணரு பாயத்தைத்
தானுணர்ந் திருத்தல் வேண்டும்
சங்கற்ப சாலவுல கத்தோற்ற மென்னவிரு
சார்பகற் றிடுதல் வேண்டும்
இந்திராதி போகமுத லியாவையு மனித்தமென்
றேதிடத் துறுதல் வேண்டும்
இச்சையற் றுச்சதா சச்சிதா னந்தமா
யின்புற் றிருத்தல் வேண்டும்.
அந்தமுத யத்தமி லேகவறி வாளனென
வனுபவித் தறிய வேண்டும்
அமலசுப் பிரதீப விமலவப் பிரமேய
வருட்சிவா னந்த மணியே.

4. சனியான கத்தபச் சுமையாங் குடும்பமெனுஞ்
சழக்கினை யிறுக்க வேண்டும்
தையலர்கள் மையல்வலை பட்டுசேல் படுகின்ற
தடுமாற்றம் நீக்க வேண்டும்
கனிபிறப் பிடைதள்ளு நானெனு ணவம்
நத்தா திருக்க வேண்டும்
நானிலந் தனிற்செவிடு குருடுமை யென்னவாழ்
நாளைக் கழிக்க வேண்டும்
கனிந்தமொழி போற்பேசி மாற்சரிய மெய்துவோர்
கடுநட் பகற்ற வேண்டும்
கற்றுமறி வற்றுபின் கதிசிறிது மின்றிநாள்
கழிக்கா திருக்க வேண்டும்

அனித்தமெனு மிவ்வுலகி னாசைதனை யற்றுநி
ராசைதல மமர்தல் வேண்டும்
அமலசுப் பிரதீப விமலவப் பிரமேய
வருட்சிவா னந்த மணியே.

5. வித்தின்றி விளைபோகந் தேக்கித் திளைக்கவே
மிக்குண் டிருக்க வேண்டும்
வீணாக வேகாண வாதனை விருத்தியை
விட்டே யிருக்க வேண்டும்
சித்திக்குட் சித்தான சின்மயவி லாசமதில்
செறிந்தே யிருக்க வேண்டும்
சிதானந்த வானந்த ஞானஸ்வ ரூபியாய்
சிவமா யிருத்தல் வேண்டும்
தத்துவத் திடநிச்ச யந்தனைப் பெற்றுமேற்
றனைவிசா ரிக்க வேண்டும்
சர்வசுக துக்கமற் றின்புற் றிருத்தலே
சதாமுத்தி யென்ன வேண்டும்
அத்துவிதந் துவிதமுத லானசம யாதீத
வருணிமல வாழ்க்கை வேண்டும்
அமலசுப் பிரதீப விமலவப் பிரமேய
வருட்சிவா னந்த மணியே.

வேண்டற் பஞ்சகம் சம்பூர்ணம்.

ஓம் நிர்மலம் ஆனந்தம்.

ஓம் சாந்தி.

ஓம் தத் ஸத்.

அனுபவ மகிழ்ச்சிப் பத்து

அறுசீர்ச்கழிநெடிலடி விருத்தம்.

1. ஊனெனு முடலந்தன்னி லுற்றபொய் வாஞ்சையாலே
நானென வழிந்துழித்த நலிவுறு மனத்தனேற்குக்
கோனெனச் சிவானந் தப்பேர் குலவுசீர்க் குரவன் வந்து
வானெனு மறிவி னுண்டு வண்மலர் சூட்டி னுனே.

2. மின்னென வழிந்துதுச்ச மேவிடு முலகந்தன்னிற் [தோ
பொன்னினைப்பெண்ணைமண்ணைப் பொழுதுக்குங்கருதியந்
இன்னலார் மனத்த ஞயிங் கீடழிந் திளைத்திடாம [கேனே.
லென்னைமுன் னுண்டு கொண்ட வெழினல மென்சொல்

3. பாதக னுகியிந்தப் பார்மிசைத் திரிந்த நாயேற்
காதர வெனவேவந்தன் றங்காஞ் சிரத்தினிற்சேர்த்
தேதமி லறிவானந்தத் தியலவோர் மொழியாலன்பின்
மாதய விருத்தியாண்டான் மற்றுகைம் மாறென்செய்கேன்

4. ஊழ்வினை வயத்தினுலே யுற்பன மாயை யுட்பட்
டாழ்பவக் கடற்றுரும்பா யலைந்தலைப்பட்ட வேற்குத்
தாழ்சடை யண்ணலுனே சற்குருவாகி வந்து
சூழ்மல ரிணைக்கீழாண்ட சுகத்தையென் சொல்லுவேனே.

5. திரிசியப் பொருளை நாடிச் செல்லலைம் பொறியிற்றுவிக்
கரிசுறு மனே விருத்திக் கட்டறுத் தகலப் போக்கிப்
பரிவுட னெனைத்தா னுக்கிப் பவபய மகலச் செய்திங்
குரிமையைக் காட்டி யாண்டா னுத்தம னளியன்றுனே

வேறு

6. முத்திக்கு வித்தென்ன முழங்கிடுநல் லன்பர்களின்
பத்திதனக் கெளியனெனப் படுசிவமே யென்போல்வந்
தொத்தமனத் துண்மையெனு மொண்டத்வமசிப்பொருளை
சித்தமயற் றறக்காட்டிச் சேவடிக்கீ ழாக்கினனே.

7. ஆரணங்க டேடரிய வற்புதனா மெந்தைபிரான்
காரணதே சிகனாகிக் கருத்திருத்தி யெனையழைத்துப்
பூரணநீ யெனவிளையிற் புகலனுப வங்காட்டி
சீரணவும் புகழ்சேரச் சேர்த்தனைத்துக் கார்த்தனனே.

8. காணப் படும்பொருள்கள் கணத்தழியு மென்றுமுன
மாணவுரைத் தான்வாச மலரடியைத் தானடைந்துஞ்
சாணேறி முழஞ்சாக்கித் தான்துக்கங் கொள்வார்போல்
காணிமனை யாசைவைத்துக் கடையவனாய் நிற்பதென்னே.

9. செம்மாந்திப் பிறப்பிறப்பிற் செறியுலண்டனெனவழிந்து
பொய்மாயை யதிர்புக்குப் புலம்பிநின்ற நாயேனை
அம்மாயா மலமகற்றி யருட்சாட்சி நீயென்று
சும்மாவி ருக்கவைத்தான் சொல்லாய்ந்து நில்மனமே.

10. சனகசுகப் பிரம்மமுதற் றாமுணர்ந்த பிரம்மைக்ய
வனுபவநன் னிலையிதென வம்பரத்தி னில்லென்று
மனதவிழ வெனையாண்ட வள்ளற்சி வானந்தன்
நனைமலர்த்தா ளெந்நாளு நானிலத்தில் வாழியவே.

அனுபவ மகிழ்ச்சிப்பத்து சம்பூர்ணம்.
ஓம் நிர்மலம் ஆனந்தம்
ஓம் சாந்தி.

ஓம் தத்ஸத்.

சிவானந்தக் குன்றம்

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

1. அருவாகி யுருவாகி யருவுருவ மாகி
யருளாகிப் பொருளாகி யம்பரமு மாகி
கருவாகிக் கருவிலுறு முயிர்க்குயிர தாகிக்
காணறிவு முதன்மூன்று மற்றொளிர்வதாகி
ஒருவாத வன்பிலெழு முயர்பரம தாகி
வொப்பரிய முத்தித் தடங்கடல தாகித்
தெருளாகித் தெரிவரிய பெரியபொரு ளாகித்
திகழ்கின்ற வொன்றே சிவானந்தக் குன்றே.

2. ஆதிநடு வீறின்றி யனியமில தாகி
யக்கரண பேதங்க ளற்றொளிர்வ தாகி
ஓதுசுழி முனையினட முனாற்றுபொரு ளாகி
வுரையுணர் விறந்தொளிரு முண்மையதுவாகிச்
சாதிமத பேதந் தணந்தபொரு ளாகிச்
சங்கற்ப விகற்பங்கள் சாராத தாகித்
தீதிலரு ளானந்த மோனவுரு வாகித்
திகழ்கின்ற வொன்றே சிவானந்தக் குன்றே.

3. வித்தாகி யவ்வித்தின் விளைவதுவு மாகி
விண்ணோடு காலங்கி நீர்நிலம தாகி
நத்துபெரு மாறத்து வாக்களென வாகி
நானாகி நீயாகி நவில்சாட்சி யாகி
வித்தையுட னவித்தைமுத லானகலை யாகி
வெண்மைமுத லைவண்ண மேவுவடி வாகி
சித்தாகிச் சடமாகி செறிபரம தாகித்
திகழ்கின்ற வொன்றே சிவானந்தக் குன்றே.

4. நன்றாகித் தீதாகி யல்லாத தாகி
நவையின்றி யொளிர்ஞான ஞேயமது வாகிச்
சென்றநெரு நல்லின்று நாளையென வாகிச்
சேயாகித் தாயாகித் தந்தையென வாகி

வென்றிபெறு பரபோத விளக்கமென வாகி
வேண்டலுடன் வேண்டாமை யில்லாத தாகி
நின்றுதெவிட் டாதவின்பச் செழுந்தேனு மாகித்
திகழ்கின்ற வொன்றே சிவானந்தக் குன்றே.

5. பின்னமொ டபின்னங் கடந்தவடி வாகிப்
பேச்சுரைக ளற்றபெரும் பேரின்பமாகி
நன்னிலம தேழாகி யப்பாலு மாகி
நானென்னுந் தற்போத வொழிவற்ற தாகி
அன்னியவ னன்னியங்க ளற்றபொரு ளாகி
யறிவாகி வேதாசலப்பொருள தாகி
சென்னிமிசை மன்னிவளர்த் திருவடியு மாகித்
திகழ்கின்ற வொன்றே சிவானந்தக் குன்றே.

சிவானந்தக்குன்றம் சம்பூர்ணம்.
ஓம்நிர்மலம் ஆனந்தம்.
ஓம் சாந்தி.

ஓம் தத் ஸத்.

திருவருட்பத்து

எழுசீர்க் கழிநெடிலடி விருத்தம்.

1. சீருறு மத்தி யாத்மிக வித்தைத்
திறத்தினை யுவரிசூ ழுலகி
லோருருக் கொண்டே யுவந்தவந் தடியேற்
குணர்த்திநல் லுணர்ச்சிதந் தாண்ட
யேருறு நின்கைம் மாறினுக் கெளியே
னியற்றிடு முதவியொன் றுளதோ
பேருறு வான்போற் கருணையே வடிவாய்ப்
பெறுசிவா னந்ததே சிகனே.

2. இழிதரு பவபந் தங்களி லிடர்பட்
டீடணை யதனிநெற் றுண்டுக்
கழிதரும் பிறவிக் கடற்புகா தடியேன்
கதித்திடு சிவகதி சேர
வழிதரு வேத முடிபிது வென்னு
வாக்கியங் காட்டிமுனுண் டச்
செழிதரு மென்ற னகச்சின காத்திற்
றிகழ்சிவா னந்ததே சிகனே.

3. உலகிரு ணீக்க வருமொரு பரிதி
யொப்பநல் லருளுருக் கொண்டு
மலகுறு மடியே னகத்துறு மிருளை
மாற்றிடு ஞான வாதவனே
நிலவுமிவ் வாழ்வைத் துயிலெனக் காணு
நிச்சல முதவிசொச் சமதாய்த்
தலம்பெறும் போத மேவடி வாகுந்
தத்சிவா னந்ததே சிகனே.

4. சுத்தியில் வெள்ளி தோற்றுதல் போலத்
துலங்கிடு முலக மியாவு
மித்தையா மென்றுள் ளுணர்த்தியா ரணத்தின்
மேம்படு பொருளினை யருளி

நித்திய மான யிடத்தினி திருந்து
நின்மலா னந்தநத் துவனே
இத்தரை சூழு மவரெலாந் துதிக்கு
மெழிற்சிவா னந்ததே சிகனே.

5. சாக்கிர முதலா மவத்தையைக் கடந்து
சமரச நன்னிலை மேவித்
தேக்குசச் சிதானந் தக்கட றன்னிற்
சிற்சொரு பத்தெமை யறிவி
னுக்கிய குருவே யருட்டிரு வுருவே
யத்துவி தத்தெளி பொருளே
நோக்குநோக் கினுக்கு நுண்ணிய னாகி
நுவல்சிவா னந்ததே சிகனே.

6. கண்டவெப் பொருளு மழிவென வொன்றைக்
கண்டதைக் கண்டதெப் பொருளோ
தொண்டனுக் கதைசிற் கண்ணினு லுணர்த்தித்
தூய்கழற் கிலகுற வாண்டு
அண்டமே தானு யிருக்குமவ் வுண்மை
யருளிய விமலமா மணியே
தெண்டிரை சூழிந் நனந்தலை யுலகிற்
றிகழ்சிவா னந்த தேசிகனே.

7. உம்பரோ டிம்ப ரறியொணுப் பொருளே
யோதரு முணர்வெனும் பொருளே
செம்பொனே பலவாம் பணிதியா கியபோற்
செறிந்திடு வியோமமாம் பொருளே
நம்புமெய் யறிஞர் நச்சிடும் பொருளே
நன்குணர்த் திடவிவ ணெழுந்த
வம்புலா மலர்பா தப்புகழ் மிக்கு
வளர்சிவா னந்த தேசிகனே.

8. தனக்கனியமாக வொருபொரு ளில்லை
தங்கிடும் பூதபௌ திகமும்
மனத்தினின் மருவுங் குணவிகற் பன்றி
மற்றிலை யெனவுல கங்க

ளனைத்தினுக் கொருமுத னியலா தில்லை
யறியென வாக்கிய முதவி
வனம்பெறு மடிச்கீ ழிருத்தியே யாண்டு
வளர்சிவா னந்த தேசிகனே.

9. அதுவிது வென்ன சுட்டுதற் கின்றி
யலகிலா சொரூபமே தானாய்
பொதுவது வாகிச் சாட்சியாய் நிற்கும்
பூரண மாகுமப் பொருணீ
யதுவென வுணர்த்தி யத்துவி தப்பே
ரருளமு தந்தனை யூட்டும்
பதுமபா தத்த சுத்தமெய்ஞ் ஞான
பரசிவா னந்த தேசிகனே.

10. நினைப்புடன் மறப்பு மற்றநன் னிலையே
நிலையெனச் சாதனங் காட்டி
நினைப்புடன் மறப்பு மற்றநன் னிலையே
நிர்க்குண நிஷ்டையென் றருளி
நினைப்புடன் மறப்பு மற்றநன் னிலையே
நின்மல முத்தியென் றுண்ட
நினைப்புடன் மறப்பு மற்றநன் னிலையே
நீள்சிவா னந்த தேசிகனே.

சிவானந்த தேசிகன் திருவருட்பத்து சம்பூர்ணம்.

ஓம் நிர்மலம் ஆனந்தம்,
ஓம சாந்தி.

ஓம் தத் ஸத்.

எக்காலக் கண்ணிகள்

உயிர் வருக்கமாலை.

கணபதி துதி.

உயிர்வருகத்தாலிங் குறுபுலம்பற் கண்ணி சொல
வயிறு பெருத்தவனை வாழ்த்துவது மெக்காலம்

அந்தமுத யத்தமிலா தாரறிவாய் நின்றசிவா
நந்தனரு ளிற்றிளைத்து நானிருப்ப தெக்காலம்.

ஆசற்ற நல்ல வடியரகத் தற்றபிர
காசசிவா னந்தன் கழற்புகுவ தெக்காலம்.

இன்பதுன்ப மென்றுங் கெழுநினைவெல் லாமொருவி
நின்றுசிவா னந்தனைமுன் நேசிப்ப தெக்காலம்.

ஈனந் தருவுடற்கிங் கிச்சைவகிக் காதுநிற்சி
வானந்த தேசிகனை யார்ந்திருப்ப தெக்காலம்.

உன்னற் கரிதா யொளிருஞ் சிவானந்த
முன்னவனைக் கண்டு மொருளிப்ப தெக்காலம்.

ஊன்பெற்றிங் கென்னை யுவந்துசிவா னந்தப்பேர்
தான்பெற்று வந்தானைச் சார்ந்திருப்ப தெக்காலம்.

எங்கு நிறைந்தவனீ யென்றனுப வப்படிக்குத்
துங்கச்சி வானந்தந் தோய்ந்திருப்ப தெக்காலம்.

ஏசற்ற வந்நிலையி லேயிருக்க வைத்தவிசு
வாசசிவா னந்தன் வாழ்வடைவ தெக்காலம்.

ஐந்துமலக் கொத்தறுத்திங் காண்டசிவா னந்தவையன்
சந்தலர்ப் பாதச் சரணடைவ தெக்காலம்.

ஓதியகல் லாப்தமுத லுற்றபணி தாமியற்றி
நீதிற்சி வானந்தச் சீரடைவ தெக்காலம்.

ஔவியமி னெஞ்சகத்தோ டார்ந்துவே தாசலனுன்
செவ்வியசி வானந்தத் தேன்குடிப்ப தெக்காலம்.

எக்காலக் கண்ணிகள்.

சம்பூர்ணம்.

வாழி விருத்தம்

விந்தைசேர் விந்துநாத வியன்சிவ சத்திவாழி
அந்தமிலறங்க ளோங்கியடியர் சத்சங்கம் வாழி
எந்தைசிற் சிவானந்தப் பேரியலுமாசிரமம் வாழி [வாழி.
சிந்தையிற் கொண்டோர் கண்டோர் செய்ப்பெரவள்ளூர்

ஓம் நிர்மலம் ஆனந்தம் ஓம் சாந்தி.

சமாதி நட்சத்திரக் குறிப்பு.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

உத்தமவாண் டென்னமறை வுணர்ந்தோர் தாமாய்ந்
தோதுபிர பவங்கன்னி மதியிற் செவ்வா
யெத்தியபிற் பக்கமுதற் பிரதமைக்க
ணியலுமொரு வசுவணி நட்சத்திரத்தில்
நித்தமுறு மார்க்கண்டு வர்க்கம் பூத்து
நிலவு*சிவா னந்தப்பேர் நிமலன் ருனுஞ்
சுத்தசிதா காசமய சொச்சொ ரூப
சுகக்கடலிற் ருேய்ந்தபெருந் திருநா ளாமே.

ஸ்ரீ சிவானந்த சுவாமிகள் குருபாதஸ்துதிமாலை சம்பூர்ணம்.

ஓம் நிர்மலம் ஆனந்தம்

ஓம் சாந்தி.

---

* சுவாமிகள் தந்தையுங்குருவும் உமாப்ரசாதானுபூதி நூலாசிரியரும் மார்க்கண்டேய வர்க்கம் சிவபரங்கிரி சுவாமிகள் மாணவரும் ஆகிய சிந்தாதிரிப்பேட்டை டேக்கு சந்துலால் எனும் காமாக்ஷி சுந்தர சுவாமிகள் சமாதி பூவிருந்தவல்லி மாங்காடென வழங்கும் சூதாரண்யத்தில் என்பது உணர்தற்பாலதாம்.

ஓம் சாந்தி.

இப்புத்தகம்.

சென்னை திருவெட்டீஸ்வரன் பேட்டை சமரச நிலைய சன்மார்க்க சபை.

பெங்களூர் கல்ஹள்ளி சின்ன ஏரி நிர்மல ஆனந்த நிலயம்.

பெரவள்ளூர்ஏரி சுவாமிகள் சமாதியின்கண் நாய்க்குட்டிச் சுவாமிகள்.

ம-ா-ா-ஸ்ரீ பெரவள்ளூர் பாலகிருஷ்ண ரெட்டியார்.

சிந்தாதரிப்பேட்டை வைக்கல் தொட்டி கண்ட்ராக்டர் சி. நாராயணசாமி நாயகர் முதலிய இடங்களிற் கிடைக்கும்.

ஓம் சாந்தி.

NOBLE PRESS, TRIPLICANE, MADRAS.